www.tamilarangam.net


# உதயன்

பிரமோதூத ஆடி 31 வியாழக்கிழமை (16-08-1990)


# புலிகளின் தலைமையை ஏற்று ஆயுதங்களை ஒப்படைத்தோம்

## ஈரோஸை கலைக்க தவறுகளே காரணம் - பாலகுமாரன்

ஈரோஸ் இயக்கம் நேற்று உத்தியோக பூர்வமாகக் கலைக்கப்பட்டது.

அந்த அமைப்பின் பிரமுகர் திரு. வேலுப்பிள்ளை பாலகுமாரன் இதனை நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்தார்.

நேற்று இதற்கென யாழ்ப்பாணத்தில் கூட்டப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்து இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

'ஈழப்புரட்சி அமைப்பு (ஈரோஸ்) இன்றிலிருந்து உத்தியோகபூர்வமாக செயல் இழந்து போகின்றது' என்று அவர் சொன்னார்.

1975ஆம் ஆண்டு ஜனவரி 3ஆம் திகதி அமைக்கப்பட்ட இந்த அமைப்பை தற்போது கலைப்பது என்று எடுக்கப்பட்ட முடிவுக்கான காரணங்களை அவர் செய்தியாளர் மாநாட்டில் விளக்கினார்.

'வடக்கு, கிழக்கு மலையக மக்களின் போராட்டத்துக்கு ஒரு முன்னெடுப்பாகவும்—

அந்தப் போராட்டத்தில விஞ்ஞான பூர்வமான அணுகு முறைகளைப் புகுத்தவும் ஈரோஸ் அமைப்பு தனது செயற் திட்டங்களை ஆரம்ப காலத்திலேயே அமைத்துக் கொண்டது'— என்றார் அவர்.

'1975-1983 ஆம் ஆண்டு காலகட்டத்தில் போராட்டம் தொடர்பான புதிய கண்ணோட்டத்தை வெளிப்படுத்துவதில் ஈரோஸ் அமைப்பு வெற்றி பெற்றது' என்று அவர் சுட்டிக் காட்டினார்.

இந்தக் காலகட்டத்தில் தமது அமைப்பின் செயற்பாடு எப்படி அமைந்தது என்பதை அவர் விளக்கினார்.

'வடக்கு, கிழக்கு மலையக மக்களை ஒன்று திரட்டி அரசியல், இராணுவ, பொருளாதார வேலைத்திட்டங்களுக் கூடாக மக்களை அணுகுவதை எமது செயற்பாடாக அமைத்தோம்.

மார்க்ஸிய. லெனினிஸ அடிப்படையில் வர்க்க ரீதியான போராட்டத்துக்கான முன்னெடுப்பை அப்போது செய்தோம்.

ஆனால் 1983 - 1987 ஆம் ஆண்டு காலகட்டத்தில் தேசிய விடுதலைப் போராட்டத்தில் கூடிய கவனம் செலுத்தவேண்டிய தேவை ஏற்பட்டது

அக்காலகட்டத்தில் பரந்துபட்ட தலைமையின் கீழ் இயக்கங்கள் ஐக்கியப்பட உழைத்தோம். அதற்காக ஈ. என். எல். எவ். என்ற கூட்டமைப்பை அமைத்தோம்.

அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை. அது எமக்கு ஒரு பெரும் தோல்வி. ஒரு பின்னடைவை ஏற்படுத்தியது

### 1987 இற்கு பிறகு விட்ட தவறுகள்

1987 இற்கு பிற்பட்ட காலத்தில் நாம் விட்ட தவறுகளே எம்மை இன்று இந் நிலைக்கு இட்டுச் சென்றது என்றால் அதில் தவறில்லை

1987 இல் இந்தியப்படையுடன் சேர்த்துத் திணிக்கப்பட்ட இடைக்காலத் தீர்வு தாக்குப்பிடிக்க முடியாதது என்பதை உணரவோ—

அந்த அடிப்படையில் உணர்ந்து செயற்படவோ நாம் தவறிவிட்டோம்.

எமது பூரண பாதுகாப்பை உறுதி செய்யாத நிலையில் ஆயுதத்தைக் கையளிப்பதோ இடைக்காலத் தீர்வை ஏற்பதோ பிழை என்பதை உணருவதில் நாம் தவறுவிட்டு விட்டோம்.

மற்றைய இயக்கங்கள் எல்லாம் போராட்டத்தை அடகு வைத்து சுயநோக்குடன் செயற்பட்ட அந்த வேளையில்—

விடுதலைப் புலிகள் இயக்கம் ஒன்றுதான் ஆயுதம் தாங்கிய போராட்ட உணர்வை மழுங்கடிக்கவிடாமல், தமிழர் பாதுகாப்புக்கு உணர்வுபூர்வமான குறியீடாகச் செயற்பட்டது.

இந்தக் காலகட்டத்தில் நாம் விட்ட தத்துவ ரீதியான தவறுகளே எம்மை இந் நிலைக்கு இட்டுச் சென்றிருக்கின்றன

### நிர்ப்பந்தம் என்பதில் அர்த்தமில்லை

எமது அமைப்பைக் கலைப்பதற்கான நிர்ப்பந்தங்கள் அல்லது நெருக்கடிகள் வெளியில் இருந்து வந்ததாகக் கூறுவதில் அர்த்தமில்லை. நாம் 1987 ஆம் ஆண்டு காலகட்டத்தில் விட்ட தவறுகள் இப்போது எமக்கு நெருக்கடிகளைத் தோற்றுவித்திருக்கின்றன என்பது தான் உண்மை.

இப்போதைய நிலையில் - போராட்ட சூழ்நிலையில் — நாம் வெறும் அரசியல் கட்சியாக இருப்பதில் அர்த்தம் ஏதும் இல்லை.

கட்சியாக இல்லாவிட்டால், நாம் ஓர் இயக்க ரீதியான போராட்ட அமைப்பாகச் செயற்படவேண்டும். ஆனால் இரண்டு காரணங்களுக்காக அந்த வழியை நாம் நாடவில்லை.

ஒன்று —

எமது அமைப்பு இயக்கரீதியான — இராணுவ ரீதியான - வடிவமைப்பை, செயற்பாட்டை இழந்துவிட்டது. இந்த நிலையில் அதனை பழைய நிலைக்குக் கட்டி எழுப்ப வேண்டுமாயின் பெரும் மூலவளத்தைத் திரட்டிச் செலவழிக்க வேண்டிய தேவை ஏற்படும். ஆனால் தற்போதைய போராட்ட சூழ்நிலையில் அது பொருத்தமற்றதும் சாத்தியமற்றதுமாகும். நாம் அப்படியான முயற்சியை எடுப்பதை மக்களும் ஏற்கமாட்டார்கள்.

இரண்டாவது -

இன்று விடுதலைப்போராட்டம் ஒரு தீர்க்கமான நிலையை எட்டியிருக்கிறது. இந்தக் காலகட்டத்தில் சகல போராட்டச் சக்திகளும் ஒரு பரந்துபட்ட தலைமையின் கீழ் வரவேண்டிய கட்டப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

இந்த வரலாற்று ரீதியான சந்தர்ப்பத்துக்கு முன்னோடியாக, நாமே எம்மைத் தடை செய்து, ஒரு தலைமைத்துவத்தின் கீழ் போராட்ட உணர்வைத் திரட்ட வழி செய்கிறோம்.

இதனால் தான் நாம் எமது சொத்துகள், ஆயுதங்கள், மூலவளங்களை ஒரு தலைமையின் கீழான போராட்டத்துக்கு ஒப்படைக்க முன் வந்தோம்.

### இயக்கமல்ல உணர்வே முக்கியம்

ஈரோஸ் இயக்கம் கலைக்கப்படுகிறது. வெளிநாடுகளில் உள்ள எமது கிளைகளும் கலைக்கப்படுகின்றன. இயக்கம் கலைக்கப்படலாம்; இயக்கம் முக்கியமல்ல; போராட்ட உணர்வுதான் முக்கியம்.

போராட்ட உணர்வு எம்மைவிட்டு நீங்கவில்லை ஈரோஸ் என்ற தளத்தைக் கலைத்து புதிய தளத்தில் எமது போராட்ட உணர்வை இணைத்துக் கொள்வதன் மூலம் எமது பங்களிப்பைத் தொடர்ந்துசரிவரச் செலுத்த முடியும் என நினைக்கின்றோம்.

### ஏற்கனவே எடுத்த முடிவுகள்

விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தை ஏற்பது என்பதும்—

எம். பி பதவிகளை துறப்பது என்பதும் —

ஆயுதங்களை ஒப்படைப்பது என்பதும்—

நாம் ஏற்கனவே எடுத்த முடிவுதான் பெப்ரவரி 5 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற எமது கூட்டத்தில்— அனேகமான பொதுக்குழு பிரதிநிதிகள் முன்னிலையில்— எடுக்கப்பட்ட முடிவுதான் அது.

இந்த விடயத்தில் நடைமுறை ரீதியான செயற்பாட்டில் எமக்கிடையே கருத்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

THE EELANAATHAM Peoples Daily

நாதம் 01 பிரமோதூத ஆடி 31 ஆம் உ வியாழக்கிழமை (16 - 08 - 1990) ஹிஜ்ரி 1410 முஹறம் 24 ஓசை 179

# ஒரு தேசிய இயக்கத்தை கட்டி எழுப்பவே புலிகளுடன் இணைப்பு

## ஈரோஸ் அமைப்பு கலைப்புக்கு செயலர் பாலகுமாரன் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

''ஒரு தேசிய இயக்கத்தைக் கட்டி எழுப்புவதற்கு நாங்களே முன்மாதிரியாகச் செயல்பட வேண்டும் என்ற நல்ல நோக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து கொள்ள முடிவு செய்துள்ளோம்'' என்று ஈரோஸ் அமைப்பின் நிறைவேற்றுச் செயலாளர் நாயகம் திரு. வே. பாலகுமாரன் நேற்றுப் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

தமக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டு ஈரோஸ் அமைப்பைத் தாம் கலைத்து விடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஈழப்புரட்சி அமைப்பு (ஈரோஸ்) இன்றிலிருந்து செயலிழந்து போகிறதென்றும், இதன் பெயரில் பொது மக்களோ இயக்கத்தோழர்களுடனோ எந்தவித தொடர்பும் இருக்காதுஎன்றும் ஈழப்புரட்சி அமைப்பின் நிறைவேற்றுக் குழுச் செயலாளர் திரு. வே. பாலகுமாரன் தெரிவித்துள்ளார்.

ஈழப்புரட்சி அமைப்பு கலைக்கப்படுவதையிட்டும் விடுதலைப்புலிகளின் தலைமையை ஏற்றுக் கொள்வதையிட்டும் தமது உறுப்பினர்களிடையே எந்தவித கருத்து வேறுபாடும் ஏற்படவில்லை என்று தெரிவித்த திரு. பாலகுமாரன் கடந்த மாசிமாதமே மேற்குறிப்பிட்ட முடிவுகளை தமது அமைப்பு எடுத்து விட்டதாகவும் சொன்னார்.

சொந்தக்காலில் நின்று போராடமுடியாமல், தலைமைத்துவத்துக்காக காலத்துக்குக்காலம் அரசியல் லாபம் தேடும் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், தமிழீழ விடுதலை இயக்கம், ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி ஈழம் தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி ஆகியன இன்று கொழும்பில் இருந்துகொண்டு செயல்படுவதையும் திரு பாலகுமாரன் கண்டித்தார்.

தமிழீழவிடுதலைப்புலிகள் தமிழீழத்தில்இன்று சிறிலங்கா இராணுவத்துடன் போராடிக் கொண்டிருப்பதன் விளைவுதான், கொழும்பில் இந்த ஆறு கூட்டமைப்பும் அரசியல் லாபம் தேடுவதற்கு ஏற்பட்ட துணிவு என்றும் அவர் குறிப்பிட்டார்.

1975 ஜனவரி 3-ல் ஈரோஸ் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது என்றும் அடிப்படைக் கொள்கை-விஞ்ஞான ரீதியாக மார்க்ஸிஸ - லெனினிஸக் கொள்கைகளைக் கடைப்பிடித்து வடக்கு - கிழக்கு - மலையகம் உள்ளடக்கிய வேலைத்திட்டங்களை செயல்படுத்தி வந்துள்ளதென்றும் குறிப்பாக மலையக மக்களையே முதுகெலும்பாகத் தமது இயக்கம் கொண்டிருந்ததென்றும் திரு. பாலகுமாரன் தெரிவித்தார்.

தமிழீழவிடுதலைப் புலிகளுடன் தமது அமைப்பின் உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் இனிமேல் தொடர்ந்து செயல்படும் என்றும் மகிழ்ச்சி தெரிவித்தார்.

இந்த மாகாநாட்டில் ஈழப்புரட்சி அமைப்பின் நிறைவேற்றுக்குழு உதுப்பினர் திரு. பாலநடராசன் (சின்னபாலா) உட்பட திருமலை, மட்டக்களப்பு உறுப்பினர்கள் பலரும் சமுகமளித்திருந்தனர்.

## தமிழீழ மீட்பு நிதி: மாணவர் குழுக்கள் ஆதரவாக பிரசாரம்

ஈ.முரசு 18-07-90

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதியில் விடுதலைப் புலிகளால் தற்போது வசூலிக்கப்பட்டுவரும் தமிழீழ மீட்புநிதி தொடர்பான விளக்கங்களை மக்களுக்கு தெளிவுபடுத்தும் வகையிலும், அறிமுகப்படுத்தும் நோக்கிலும், மாணவரமைப்புக்கள் சில விடுதலைப்புலிகளுக்கு உதவியாக புதிய முறைகளைக் கையாளுகின்றன.

இதன்முன்னோடியாக வடமராட்சிப்பகுதியில் இவ்வாரம் முதல் மாணவர் அமைப்புக்கள் தெருக்கூத்துப் பாணியில் நிகழ்ச்சிகளை அமைத்து வீதி வீதியாக கூத்தாடி மக்களைக் கூட்டி தமிழீழ மீட்புநிதி பற்றிய விளக்கமளித்துவருகின்றனர்.

கடந்த ஞாயிறு இரவு புலோலி மேற்கு, பருத்தித்துறைப் பகுதிகளில் உள்ள ஒழுங்கைகள் எல்லாம் இக்குழுவினர் சென்று மேற்படி விளக்கங்களை அளித்துச் சென்றனர்.

(56)

## தனது மகனை போருக்கு அனுப்பிய அன்னை

(நாவற்குழி)

பத்துமாதம் சுமந்து பால் ஊட்டி, சீராட்டி வளர்த்த தனது மகனை போர்முனைக்கு அனுப்புவதற்கு பயிற்சி பெறுவதற்காக தென்மராட்சியைச் சேர்ந்த அன்னை ஒருவர் விடுதலைப் புலிகளிடம் கையளித்தார்.

மட்டுவிலைச் சேர்ந்த திருமதி கு. செல்வராணி என்ற அன்னையே தனது பன்னிரண்டு வயது மகன் கி. பாஸ்கரன் என்பவரை தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. பாப்பாவிடம் ஒப்படைத்தார்.

தனது மகளும் விரும்பினால் போர்முனைக்கு அனுப்புவதற்குத்தான் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

''தமிழீழம் காண்பதற்காக எல்லோரும் தங்களது உயிரை மட்டுமல்ல உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணிக்கத் தயாராக வேண்டும். என்றும் அவர் மேலும் கூறினார்.

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேறுபாடு இருந்திருக்கலாம். ஆனால் இறுதி முடிவில் வேறுபாடுகள் அனேகமாக இல்லை என்றே கூறலாம்.

### மலையக மக்கள்

அமைப்பைக் கலைப்பதான இந்த முடிவு வடக்கு, கிழக்கு சூழ்நிலைக்கு ஏற்ப எடுக்கப்பட்ட ஒன்று என்பதை ஏற்றுக் கொள்கிறேன். இந்த விடயத்தில் மலையக மக்களின் உணர்வை நாம் புறக்கணித்து விட்டோம் என்று அவர்கள் வேதனைப்படுவதையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். மலையக மக்கள் மத்தியில் எமது முடிவு குழப்பத்தையும் விரக்தியையும் ஏற்படுத்தியிருக்கிறது என்பது உண்மையே.

ஆனால் காலத்தின் கட்டாயத்தை உணர்ந்து அவர்கள் தங்களுக்குரிய பாதையை இப்போது செப்பனிட்டு, போராட்ட வடிவை வடிவமைத்துக் கொள்ள வேண்டும் அங்குள்ள சக்திகளுடன் இணைந்து அவர்கள் செய்யும் ஏற்பாடுகளுக்கு தார்மீக ரீதியில் ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்க வேண்டிய கடமை வடக்கு; கிழக்கு மக்களுக்கு இருக்கிறது.

மற்றைய அமைப்புகள், இயக்கங்கள் தமது அடிப்படை குணாம்சத்தை இழந்து விட்டன.

ஆனால் விடுதலைப்புலிகள் இயக்கம் ஒன்றே தனித்துவமாக, சொந்தக்காலில்நின்று, தனக்குரிய போக்கில் செயற்பட்டு வருகின்றது.

இன்று ஆறு கட்சிக் குழுக்கள் கொழும்பில் இடைக்காலத் தீர்வு பற்றி பேசுகின்றன.

ஆனால் விடுதலைப் புலிகள் இங்குநடத்தும் போராட்டத்தினால் தான் அங்கிருந்து அந்தளவுக்காவது இலங்கையுடன் அவர்கள் பேசும் நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை புரியாமல் அவர்கள் அங்கே அரசியல் வியாபாரம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அத்தகைய அப்பட்டமான துரோகத்தை செய்ய நாம் தயாரில்லை.

இந்திய அரசு கொண்டு வந்த முறையினாலோ—

அல்லது விடுதலைப் புலிகள்— ஸ்ரீலங்கா அரசு பேச்சுக்களினாலோ—

எந்த வித இடைக்காலத் தீர்வும் கிட்டவில்லை. எமது பிரச்சினைக்கு இடைக்காலத் தீர்வு— தற்காலிக ஏற்பாடு— எதுவும் இனிப்பயன் இல்லை. இறுதி தீர்வை எட்ட போராடுவதே ஒரே வழி

— இவ்வாறு அவர் கூறினார். (உ-5-3)

## கருவையும் அழிக்கும் பொல்லாக் குண்டுகள்!

யாழ்ப்பாணம், ஆக. 11

தமிழ்ப் பகுதிகளில் இடம் பெற்றுவரும் பயங்கரக் குண்டு வீச்சுகளால், இன்றைய தமிழ்ச் சந்ததியினர் மட்டும் அழிக்கப்படவில்லை.

தமிழ்த் தாய்மாரின் கருவில் இருக்கும் வருங்காலத் தமிழ்ச் சந்ததியினரும் அழிக்கப்படுகிறார்கள்!

முன்னையது நேரடி இன ஒழிப்பு, பின்னையது மறைமுக இன ஒழிப்பு.

தமிழ்ப் பகுதிகளில் போடப்படும் குண்டுகள், குடிமக்கள் வாழும் பகுதிகளில் பாவிக்க ஒவ்வாதவை. போர்க்காலங்களிலும், எல்லைப் புறங்களிலும். தாக்குதல் நடத்த உபயோகிக்கப்படுபவை.

பொம்மர், அவ்ரோ, சகடை( விமானங்கள் போடும் எடை கூடிய குண்டுகளால் கர்ப்பிணித் தாய்மார் அதிர்ச்சி, பயம் ஆகியவற்றால் ஏனையோரை விட மிகப் பெரிய அளவில் பாதிக்கப்படுகின்றனர்.

தனக்குத் தெரிந்தமட்டில் கடந்த குண்டுத் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் ஆறு கர்ப்பிணிகளுக்குக் குழந்தைகள் இறந்து பிறந்தன என்று வைத்திய அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். அதேபோல ஆறு கர்ப்பிணிகளுக்குக் கருச்சிதைவு உண்டானது எனவும் அவர் சொன்னார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து பல கர்ப்பிணிகள் இடம்பெயர்ந்து விட்டதால் சரியான கணக்கெடுப்பு நடத்தும் பட்சத்தில் குண்டுத் தாக்கத்தினால் பாதிக்கப்படும் கர்ப்பிணிகளின் வீதம் கூடுதலாக இருக்க வாய்ப்புண்டு என்று அவர் அச்சம் தெரிவித்தார். (அ-10)

## கால் இழப்பு

அக்கரைப்பற்றில் இராணுவத்தினரும் ஊர்காவல் படையினரும் கூட்டாகத் தேடுதல் நடத்தினர்.

தேடுதலின் போது மிதிவெடி ஒன்று வெடித்து, ஒருவர் காலை இழந்தார் [ஒ

## இப்படியும் நடக்கிறது

தமிழீழ விடுதலைக்காக போராடும் விடுதலைப்புலிப் போராளிகளுக்கு இலங்கை அரசாங்கம் அவ்வப்போது தமது மனநிலை வேகத்துக்கு ஏற்ப - கொடுத்துவந்துள்ள - கொடுத்துவருகின்ற பெயர்களின் பட்டியல் இப்பொழுது நீண்டுகொண்டே போகிறது!

விடுதலை விரும்பிப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இலங்கை அரசு ஆரம்பத்தில் இட்டபெயர். பிரிவினைவாதிகள்.

இதனைத் தொடர்ந்து; சட்டவிரோதிகள், பயங்கரவாதிகள், கெரில்லாக்கள், தீவிரவாதிகள், தேடப்படுவோர், குற்றவாளிகள்.........

இன்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் வாயிலிருந்து உதிர்ந்த புதுப்பெயர் 'தமிழ் மக்களின் இரட்சகர்கள்!'

'இரட்சகர்' என்ற பெயர் இயேசுக் கிறீஸ்துவுக்கும் உண்டு. இப்பூவுலகையே இரட்சித்துக் காத்தவர் இயேசு பெருமான். ஆனாலும் இப்பெயர் பலருக்கும் இப்பொழுதுசூட்டப்பட்டுவருகிறது. இந்தவரிசையில் இத்தாலி தேசத்தின் இரட்சகர் - கரிபால்டி. ஜேர்மன் தேசத்து இரட்சகர் - 'பிஸ்மார்க்' ரஷ்யாவின் இரட்சகர் - 'லெனின்' அமெரிக்க நாட்டின் இரட்சகர் - 'ஆபிரகாம் லிங்கன்' சீன தேசத்தின் இரட்சகர் - 'மாசேதுங்', அமெரிக்க நீக்ரோக்களின் இரட்சகர் - மாட்டின் லூதர் கிங்', கியூபா நாட்டின் இரட்சகர் - 'பிடல்வ் காஸ்ட்ரே', தென்னாபிரிக்காவின் இரட்சகர் - 'நெல்சன் மண்டேலா'. பாலஸ்தீன நாட்டின் - இரட்சகர் - யாஸீர் அரபாத். வியட்னாம் நாட்டின் இரட்சகர் ஹோசிமிங். இந்தியாவின் இரட்சகர் - 'மகாத்மா காந்தி'!

ஈழத் தமிழ் மக்களின் இரட்சகர் யார் என்பதனை அமைச்சர் ரஞ்சன் ஊகித்து அறிந்துதான் இப்புதிய பெயரை சூட்டியுள்ளாரோ என்று எண்ணத் தோன்றுகிறது!

- ஊடுருவி

## "ஈரோஸ் பிரதிநிதிகளாக இறுதியாக சந்திக்கிறோம்"

### பத்திரிகையாளரிடம் பாலகுமாரன்

யாழ்ப்பாணம், ஆக. 16

''ஈரோஸ் அமைப்பின் பிரதிநிதிகள் என்ற முறையில் பொது மக்களையோ, மக்கள் பிரதிநிதிகளையோ நாம் சந்திப்பது இதுவே இறுதியானதாகும்''.

—இவ்வாறு நேற்று பத்திரிகையாளர்களைப் பார்த்துக் கூறினார் திரு. வேலுப்பிள்ளை பாலகுமாரன்.

''தனிப்பட்ட முறையில் பாலகுமாரனாக நான் உங்களை இனிச் சந்திப்பேன்'' என்றார் அவர்.

''இதுவரை காலமும் ஈரோஸ் அமைப்புக்கு நியாயபூர்வமான முறையில் ஒத்துழைப்புக் கொடுத்ததற்காக இந்த இறுதிச் சந்தர்ப்பத்தில் சகல பத்திரிகைகளுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்'' என்றும் அவர் சொன்னார்.

(உ-3-5)

தொகு மகளி... 3ம் பக்க தொடர்ச்சி

திருமதி இ. செல்வராணியின் கணவர் கடந்த வருடம் தமிழ்க்குழு ஒன்றினால் சுட்டுக் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதே போன்று குடாநாட்டின் பல பகுதிகளிலும் அன்னையர்கள் தமது பிள்ளைகளை போர்முனைக்கு அனுப்பி வருவதாகத் தெரிகிறது. (107)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்முரசு
THE TAMIL MURASU
17-08-1990

# இயக்கம் கலைக்கப்பட்டுவிட்டாலும் போராடும் உணர்வு கலையவில்லை!

## ஈரோஸ் கலைப்பு குறித்து திரு. வே. பாலகுமார்

**''ஆகஸ்ட் 15ம் திகதி ஈரோஸ் இயக்கம் உத்தியோகபூர்வமாக செயலிழக்கிறது. இது எந்தவொரு நிர்ப்பந்தத்தினாலும் ஏற்பட்டதல்ல. இது ஓர் வரலாற்று முடிவு என்றே நாம் கருதுகிறோம். வரலாற்று விபத்து என்றும் கூறலாம்''**

ஈரோஸ் தலைவர்களில் ஒருவரான திரு. வே. பாலகுமார் ஈரோஸ் இயக்க கலைப்பு குறித்து இவ்வாறு கூறினார். அவர் 15ம் திகதி புதன்கிழமை பத்திரிகையாளர் மாநாடு ஒன்றைக்கூட்டி ஈரோஸ் இயக்க கலைப்பு குறித்து தெளிவுபடுத்தினார். பத்திரிகைகளுக்கு நன்றிதெரிவித்த அவர் தாம் உத்தியோகபூர்வமாகச் சந்திக்கும் கடைசிவைபவம் இது எனவும் கூறினார். பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்து உரையாடிய திரு.பாலகுமார் அவர்கள் கூறிய குறிப்பிடத்தக்க விடயங்கள் வருமாறு:

ஈரோஸ் எனப்படுகின்றஈழப் புரட்சி அமைப்பு 1975ம் ஆண்டு ஜனவரி 3ம் திகதி உருவாக்கப்பட்டது. விஞ்ஞானபூர்வமான அணுகுமுறை மூலமாக வடக்கு, கிழக்கு, மலையக மக்களை இணைத்த போராட்ட வடிவத்தினைத்தினையே ஈரோஸ் கொண்டிருந்தது.

ஈழப் போராட்டத்தில் ஈரோஸின் பங்களிப்பு ஓர் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியது எனவே நாம் நம்புகிறோம்.

75 இல் இருந்து 83 வரை முக்கியமான பரிசோதனை கால கட்டமாகவே எமது இயக்க செயல்பாடுகள் இருந்தன.

வவுனியா கண்ணாட்டி என்னுமிடத்தில் பண்ணையொன்று அமைக்கப்பட்டு மக்களைத்திரட்டி முதல்முறையாக அரசியல், பொருளாதார,போராட்ட பயிற்சிகளை அளித்தோம் வர்க்க ரீதியாக போராட்ட ஆயத்தங்களும் அப்போது எம்மால் மேற்கொள்ளப்பட்டன.

83ம் ஆண்டு நிகழ்ந்த இனக்கலவரத்திற்குப் பின் ஏற்பட்ட புதிய பரிமாணத்தில் தேசிய விடுதலை என்பதே கூர்மையடைந்தது எனவே எமது போராட்டம் 87 வரை இன்னொரு வடிவத்தைப் பெற்றது எனலாம்.

தமிழ் இயக்கங்களிடையே ஐக்கியத்தை உருவாக்க அக்காலங்களில் ஈரோஸ் தீவிர முயற்சிகளை எடுத்தது. இந்த ஐக்கிய முயற்சி தோல்வியிலேயே முடிந்தது.

87ம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டதன் பின்பு உருவான காலச் சூழ்நிலைகளினால் எமது இயக்கச் செயல்பாடுகளில் குறிப்பிடத்தக்க பின்னடைவு ஏற்பட்டது. விடுதலைப்புலிகள் இயக்கம் மட்டுமே அடிப்படை போராட்டத்தில்தீவிரத்துடன் செயல்பட்டது. மற்றைய பல குழுக்கள் தங்கள் தலைமைகளைத் தக்கவைக்க போராட்டத்தை அடைவுவைத்தன. தோல்வியை ஒப்புக்கொள்ள முடியாமல் துரோகத்தனத்தில் ஈடுபட்டன.

நாம் எமது தோல்வியை ஒப்புக்கொள்கிறோம். பரந்துபட்ட தேசியத் தலைமையின் கீழ் சகல தமிழ் இளைஞர்களும் ஒன்றுபடவேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டு அதன் முன்மாதிரியாகவே ஈரோஸ் இயக்கம் கலைக்கப்படுகிறது.

ஈரோஸின் பல தோழர்கள் விடுதலைப்புலிகளோடு இணைந்து வருகின்றனர். நாம் அவர்களைக் கட்டாயப்படுத்தவில்லை. கட்டாயப்படுத்தவும் முடியாது. போராடும்உணர்வு இயல்பாகவே வரவேண்டும்.

விடுதலைப்புலிகளின் நிர்ப்பந்தத்தினாலேயே ஈரோஸ் கலைக்கப்பட்டது என்கிறபிரச்சாரம் பொய்யானதாகும், கடந்த மாசி மாதம் 5ம் திகதியே இந்த முடிவினை நாம் ஆராயத்தொடங்கிவிட்டோம் உண்மையில் மக்களுக்குப் பயந்து, மக்கள்மத்தியில் நா[ம்] துரோகிகளாகிவிடக் கூடாது என்பதற்காகவே இயக்கத்தைக் கலைத்தோம்.

ஈரோஸின் சகல சொத்துக்களும் விடுதலைப்புலிகளிடமே ஒப்படைக்கப்பட்டு விட்டன. வெளிநாட்டுக்கிளைகள்யாவும் மூடப்பட்டுவிட்டன.

தலைமைக்காக இயக்கம் நடாத்தி அரசியல் வியாபாரம் செய்யும் மற்றைய இயக்கங்களோடு எம்மையும் சேர்த்துக் கொள்ள நாம் விரும்பவில்லை

தமிழர் பாதுகாப்பு என்பதன் குறியீடாக விடுதலைப் புலிகளே உள்ளனர் என்பதை நாம் மனப்பூர்வமாக ஒப்புக் கொள்ளுகிறோம். புலிகளின் போராட்டம் வெற்றி பெற வேண்டும் என்பதிலும் நாம் முனைப்பாக இருக்கிறோ[ம்].

இயக்கம் கலைந்துவிட்போதும் போராட வேண்டும் என்கிற உணர்வு கலைந்துவி[ட]வில்லை.

இயக்கத்தனம் என்பது அற்றுப் போய்போராட வேண்டும் என்கிற உணர்வே இப்போது மனதில்மிஞ்சி நிற்கிறது.

இவ்வாறு திரு. பாலகுமா[ர்] தெரிவித்தார்.

ஈரோஸின் சகல சொத்துக்களும் விடுதலைப்புலிகளிடமே ஒப்படைக்கப்பட்டு விட்டன. வெளிநாட்டுக்கிளைகள் யாவும் மூடப்பட்டு விட்டன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்